1970 பிப்ரவரி 28]

தஞ்சாவூர் மாவட்டத்தில் கயிறு தொழிற்சாலை

*142 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் நார்-கயிறு தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நார் கயிறு தொழிற்சாலை நிறுவுவதற்காக அனுமதிக்கப்பட்டிருப்பது தனியார்த் துறையிலா? அல்லது கூட்டுறவுத் துறையிலா? தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் நிறுவ அனுமதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்தில் அரசாங்க உதவியுடன் பட்டுக்கோட்டையில் நிறுவப்பட இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, நார்-கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்க தஞ்சை மாவட்டத்தில் தனியார் விண்ணப்பம் செய்திருக்கிறார்களா? அப்படியெனில், எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? எத்தனை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தேங்காய் நாரினால் கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கென ஒரு தனி அதிகாரியை நியமித்து, இந்தத் தொழிற்சாலை மற்ற மாநிலங்களில் எப்படி இயங்குகின்றது என்பதைக் கண்டுவர அவர் அனுப்பப்பட்டார். அவர் தந்த அறிக்கையிலே 6 அரசுத் துறையிலே மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட் ஆரம்பிக்கலாம் என்றும், தனியார்க்கு 20 மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட் கொடுக்கலாம் என்றும் தரப்பட்டிருக்கிறது. மொத்தச் செலவு 24 லட்சம் ரூபாய் ஆகும். முதன் முதலிலே தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலே இதனை ஆரம்பிக்கலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். தனியார்த் துறைக்கு உதவி செய்வதைப் பற்றிப் பின்னாலே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறப் பட்டிருக்கிறது.

Potassium Chlorate Factory

*143 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a potassium chlorate factory is to be set up in Cudalur near Periyar lower camp under Co-operative sector; and

(b) if so, the estimated cost thereof?